**13.02.2025**

**MCOP.No. 8/2018**
**ம.சா.1 : கருப்பையா**
**<u>3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. பின்னிட்டு சாட்சி தான் பார்த்தாக சொல்கிறார். நான் ஒப்படைத்துள்ள மாதிரி வரைப்படத்தில் விபத்து நடு ரோட்டில் நடைபெற்றதாக தான் குறிப்பிட்டுள்ளது என்றால் சரியல்ல. இடது பக்கம் விபத்து நடைபெற்று நடு ரோட்டில் தூக்கி வீசப்பட்டதாக சம்பவத்தை நேரில் பார்த்தேன். அவ்வாறு என்னுடைய மனுவிலும், பிரமாண பத்திரிகையிலும் விபத்து இடது பக்கம் நடைபெற்று நடு ரோட்டில் தூக்கி வீசப்பட்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான்.

2) என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் இந்த விபத்தை நேரில் பார்த்தாக சொல்லவில்லை என்றால் (குறிப்பு - அவ்வாறு எதுவும் இல்லை) சரிதான். இரு சக்கர வாகனத்தில் சென்று நான் அவரை இறக்கிவிட்டு சென்றதாக என்னுடைய பிரமாண பத்திரிக்கையில் சொல்லவில்லை. விபத்து சமயத்தில் மைனர் கவியரசனும், அவருடைய தாயாரும் நின்று கொண்டு இருந்த லாரிக்கு பின்பு புறத்தில் இருந்து திடீர் என்று வந்ததால் தான் எதிரே வந்த ஆமினி மீது மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

3) விபத்திற்கு காரணம் மைனர் கவியரசன் என்பதால் தான் இரண்டு நாட்கள் கால தாமதமாக பின் யோசணை செய்து புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்து சம்மந்மாக நான் புகார் கொடுக்கவில்லை. என் மனைவி தான் புகார் கொடுத்தார். 04.08.2018க்கு பின்னிட்டு கவியரசன் தொடர் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

4) அவருக்கு ஏற்பட்ட காயங்கள் குணமாகிவிட்டது என்றும், மனுவிற்காக அவருக்கு ஊனம் இருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மனுவிற்காக நான் சமர்பித்துள்ள பில்கள் அதிக இழப்பீடு கோருவதற்காக தயார் செய்யப்பட்டுள்ளது

என்றால் சரியல்ல. நான் இந்த மனுவில் தாக்கல் செய்துள்ள போக்குவரத்து பில்கள் அனைத்து கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் ஆமினி வேனின் உரிமையாளர் சாலை வரியை செலுத்தாமல் நிலுவையில் வைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

5) பாலிசி விதிமுறைகளை மீறியதால் 3ம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளின் கீழ கோரியுள்ள தொகை மிக அதிகமானது என்றும், 3ம் எதிர்மனுதாரருக்கு எதிராக இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2025.02.13 18:42:23 +0530

**Accidents Claim Tribunal,**
**Attur.**